TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(குற்றவியல் நடைமுறைச் சட்டம் 154 இன் கீழ்)

C 8109467

1. District / மாவட்டம் : திருவாரூர் PS / காவல்நிலையம் : V&AC Year / ஆண்டு : 2023 FIR No / மு.த.அ. எண் : 2/23 Date / நாள் : 26/4/23

2. (i) Act / சட்டம் : IPC Sections / பிரிவுகள் : 120(B), 409, 420, 468,
   (ii) Act / சட்டம் : IPC Sections / பிரிவுகள் : 471 IPC r/w 109 IPC &
   (iii) Act / சட்டம் : Prevention of Corruption Act 1988 as amended in 2018 Sections / பிரிவுகள் : 13(2) r/w 13(1)(a) of PC Act 1988 as amended 2018
   (iv) Other Acts & Sections / பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : / குற்ற நிகழ்வு நாள் Date from : / நாள் முதல் 2016 Date to : / நாள் வரை 2019
   Time Period : / நேர அளவு Time from : / நேரம் முதல் Time to : / நேரம் வரை
   (b) Information Received at PS. Date : / காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 26/4/2023 Time : / நேரம் 16.30 hrs
   (c) General Diary Reference : Entry No(s) / பொது நாட்குறிப்பில் பதிவு விவர எண் Time : / நேரம்

4. Type of Information : Written/ Oral : / தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Based on VR

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: / குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் அடியக்கமங்கலம், திருவாரூர் 15 KM, கிழக்கு
   Beat Number : / முறைக் காவல் எண் (b) Address : / முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : / இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த காவல்நிலையப் பெயர் District : / மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : / குற்றமுறையிட்டவர்/ தகவல் தந்தவர் பெயர் R. அருண்பிரகாஷ் (b) Father's/ Husband's Name : / தந்தை / கணவர் பெயர் S. ராஜாராமன்
   (c) Date / Year of Birth : / நாள் / பிறந்த ஆண்டு 20/6/1973 (d) Nationality : / நாட்டினம் இந்தியன் (e) Passport No. : / வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : / வழங்கப்பட்ட நாள் Place of Issue : / வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : / தொழில் காவல் ஆய்வாளர் (g) Address : / முகவரி V&AC, திருவாரூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1. திருமதி. ரா. முத்துமீனாட்சி வயது 47/2023, த/பெ ராஜேந்திரன், முன்னாள் RDO, திருவாரூர் மற்றும் பெயர் தெரிந்த 11 நபர்கள்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
   குற்றமுறையிட்டவரால் / தகவல் கொடுப்பவரால் முறையீட்டில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   தாமதமில்லை

GCP-245-24(Type-2) 50,000 Cps-21.3.18(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10 Total value of properties stolen / involved
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது :

திருவாரூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் R.அருண்பிரசாத் ஆகிய நான் இன்று 26.04.2023-ந் தேதி 16.30 மணியளவில், திருவாரூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்த போது, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரகத்தின் குறிப்பாணை VR.No. 9492/2020/REV/TVR நாள். 03.02.2023 படி விழிப்பு அறிக்கையை பார்வையிட்டு வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு: எதிரிகள் விபரம் : 1) திருமதி.ரா.முத்துமீனாட்சி வயது 47/2023. த/பெ. ராஜகிருஷ்ணன், முன்னாள் வருவாய் கோட்ட அலுவலர், திருவாரூர், திருவாரூர் மாவட்டம், 2) திருமதி.தெ.துர்காராணி வயது 36/2023. த/பெ. தெட்சிணாமூர்த்தி, முன்னாள் கிராம நிர்வாக அலுவலர், அடியக்கமங்கலம், திருவாரூர் மாவட்டம். 3) திரு.G.கார்த்திக் வயது 45/2023. த/பெ. ஞானசேகரன், கிராம உதவியாளர், கிடாரங்கொண்டான், திருவாரூர், திருவாரூர் மாவட்டம், 4) திருமதி.தமணிமேகலை வயது 58/2023, க/பெ. அழகிரிசாமி தேசிய நெடுஞ்சாலை எண்.67 & 45C-யின் தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு). திருவாரூர். 5) திரு.G.முருகன் த/பெ.ஞானசேகரன், ஆண்டிபாளையம் மெயின் ரோடு, அடியக்கமங்கலம் கிராமம், திருவாரூர்.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed R. B. V. Nandagopal ...... DSP ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ...... V&AC, Thiruvarur ......on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R. Arun Prasad
26/4/23

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name பெயர் R. ARUN PRASAD.
Rank நிலை INSPECTOR OF POLICE,
V&AC, Thiruvarur.

Contd........

திருவாரூர் மாவட்டம், 6) திருமதி.G.முல்லையம்மாள், க/பெ.ஞானசேகரன், ஆண்டிபாளையம் மெயின் ரோடு, அடியக்கமங்கலம் கிராமம், திருவாரூர், திருவாரூர் மாவட்டம். 7) திரு.G.குமார், த/பெ.ஞானசேகரன், ஆண்டிபாளையம் மெயின் ரோடு, அடியக்கமங்கலம் கிராமம், திருவாரூர், திருவாரூர் மாவட்டம், 8) திரு.G.சுகுமார், த/பெ.ஞானசேகரன், ஆண்டிபாளையம் மெயின் ரோடு, அடியக்கமங்கலம் கிராமம், திருவாரூர், திருவாரூர் மாவட்டம், 9) திரு.G.சிவகுமார், த/பெ.ஞானசேகரன், ஆண்டிபாளையம் மெயின் ரோடு, அடியக்கமங்கலம் கிராமம், திருவாரூர், திருவாரூர் மாவட்டம், 10) திருமதி.G.சதீஸ்குமார் வயது, த/பெ.ஞானசேகரன், ஆண்டிபாளையம் மெயின் ரோடு, அடியக்கமங்கலம் கிராமம், திருவாரூர், திருவாரூர் மாவட்டம், 11) திரு.G.வினோத்குமார், த/பெ.ஞானசேகரன், ஆண்டிபாளையம் மெயின் ரோடு, அடியக்கமங்கலம் கிராமம், திருவாரூர், திருவாரூர் மாவட்டம், 12) திருமதி.N.சுகுமாரி, க/பெ.R.நாராயணன், தேரடிதெரு, திருப்பாபுலியூர் (அஞ்சல்), கடலூர் NT, கடலூர் மாவட்டம், கடந்த 2014 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரையிலான காலகட்டத்தில் எதிரி-1 திருமதி. ரா. முத்துமீனாட்சி, திருவாரூர் மாவட்டம், வருவாய் கோட்ட அலுவலராக 13.10.2014 முதல் 30.04.2018 வரையிலும், எதிரி-2 திருமதி.தெ.துர்காராணி, திருவாரூர் தாலுக்காவில் உள்ள அடியக்கமங்கலம் கிராம நிர்வாக அலுவலராக 11.11.2013 முதல் 06.09.2017 வரையிலும், எதிரி-3 திரு.G.கார்த்திக், திருவாரூர் தாலுக்கா, கிடாரங்கொண்டான் கிராமத்தின் கிராம உதவியாளராக 14.07.2014 முதல் தற்போது வரையிலும் மற்றும் எதிரி-4 திருமதி.த.மணிமேகலை என்பவர் தேசிய நெடுஞ்சாலை எண்.67 & 45-C-யின் தனி மாவட்ட வருவாய் அலுவலராக (நில எடுப்பு)-ஆக 15.02.2013 முதல் 1.07.2020 வரை பணிபுரிந்துள்ளார்கள். எனவே எதிரிகள் 1 முதல் 4 வரையிலானவர்கள் ஊழல் தடுப்பு சட்டம் 1988 பிரிவு 2 (c)-படி பொது ஊழியர்கள் ஆவார்கள். எதிரி-5 திரு. G. முருகன், எதிரி-6 திருமதி. G. முல்லையம்மாள், எதிரி-7 திரு. G. குமார், எதிரி-8 திரு. G. சுகுமார், எதிரி-9 திரு. G. சிவகுமார், எதிரி-10 திரு. G. சதீஸ்குமார், எதிரி-11 திரு. வினோத்குமார் மற்றும் எதிரி-12 திருமதி. N. சுகுமாரி ஆகியோர் திருவாரூர் மாவட்டம் அடியக்கமங்களம் கிராம பகுதியை சார்ந்தவர்கள் ஆவார்கள். தேசிய நெடுஞ்சாலை சட்டம் 1956 பிரிவு 3(D)-ன்படி தேசிய நெடுஞ்சாலை எண்.67, நாகப்பட்டினம் முதல் தஞ்சாவூர் பிரிவுக்கு இடையில் 80 கிலோ மீட்டர் வரையில் திருவாரூர் மாவட்டத்தில் இருவழி பாதை அமைக்கும் பணிக்கு அரசு என்னென்ன நிலங்களை நில ஆர்ஜிதம் செய்ய உள்ளது என அரசிதழிலிலும், தின நாளிதழ்களிலும் வெளியிட்டுவிட்டால் அதன்பிறகு அந்த நிலம் தொடர்பாக வருவாய் துறை மற்றும் பதிவுத்துறையில் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளக்கூடாது என விதி வகுக்கப்பட்டுள்ளது. மேலும் 1956-ம் வருடத்திய தேசிய நெடுஞ்சாலை சட்டத்தின் (சட்டம் 48 /1956) 3D (1) மற்றும் 3G (3) பிரிவின் கீழ் சாலை

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் வெளியிட்டுள்ள 16.05.2015 தேதியிட்ட அறிக்கையில் அடியக்கமங்கலம் கிராம புல எண். 197/11 அரசு புறம்போக்கு என்றும், நிலத்தின் வகைபாடு நிலுவையினம் என்றும், பரப்பு 2780 சதுர மீட்டர் என்றும் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி உத்தரவுக்கு மாறாக, எதிரிகள் 1 முதல் 4 வரையிலான பொது ஊழியர்கள், தனிநபர் எதிரிகளான 5 முதல் 12 வரையிலானவர்களுடன் கூட்டு சேர்ந்து சுயலாபம் அடையும்பொருட்டு, குற்ற சதியில் ஈடுபட்டு அரசு பதவியை தவறாக பயன்படுத்தி, அரசால் வெளியிடப்பட்டுள்ள அரசாணைக்கு முரணாக திருவாரூர் மாவட்டம், அடியக்கமங்கலத்தில் உள்ள அரசு நத்தம் புறம்போக்கு இடமான புல எண்.197/11 பரப்பு 0.36.00 ஏர்ஸ் இடத்தில் 29.55 ஏர்ஸ் இடத்திற்கு தவறான இலவச வீட்டுமனை பட்டா மாற்ற உத்தரவை எதிரிகள் 5 முதல் 12 வரையிலான தனி நபர்களுக்கு சாதகமாக 24.10.2017-ல் செய்துள்ளார்கள். பின்னர் இந்த தவறான இலவச வீட்டுமனை பட்டா மாற்ற ஆணையை தனிநபர் எதிரிகளான 5 முதல் 12 வரையிலானவர்கள் மேற்படி பட்டா, ஒரு பொய்யான ஆவணம் என நன்கு அறிந்து தேசிய நெடுஞ்சாலை எண்.67 & 45C, நில எடுப்பு மாவட்ட வருவாய் அலுவலரான எதிரி-4-யிடம் தாக்கல் செய்து அதன்மூலம் எதிரி-7 திரு.G.குமார், த/பெ.ஞானசேகரன் என்பவர் 238 சதுர மீட்டர் பரப்புக்கு ரூ.18,70,037/- தொகையும், எதிரி-8 திரு.G.சுகுமார், த/பெ.ஞானசேகரன் என்பவர் 370 சதுர மீட்டர் பரப்புக்கு ரூ.29,07,201/- தொகையும், எதிரி-9 திரு.G.சிவகுமார், த/பெ.ஞானசேகரன் என்பவர் 285 சதுர மீட்டர் பரப்புக்கு ரூ.22,39,330/- தொகையும் 4) எதிரி-4 -ன் மனைவி திருமதி.விஜயலெட்சுமி பெயரில் 299 சதுர மீட்டர் பரப்புக்கு ரூ.23,49,333/-தொகையும் எதிரி-10 திரு.G.சதீஸ்குமார், த/பெ.ஞானசேகரன் என்பவர் 335 சதுர மீட்டர் பரப்புக்கு ரூ.26,32,195/- தொகையும் எதிரி-11 திரு.G.வினோத்குமார், த/பெ.ஞானசேகரன் என்பவர் 460 சதுர மீட்டர் பரப்புக்கு ரூ.36,14,358/- தொகையும் மற்றும் எதிரி-12 திருமதி.N.சுகுமாரி, த/பெ.ஞானசேகரன், க/பெ.நாராயணன் என்பவர் 353 சதுரமீட்டர் பரப்புக்கு ரூ.27,73,627/- தொகையும் 11.10.2019ஆம் தேதி பெறுவதற்கு உடந்தையாக இருந்துள்ளார்கள். இந்த செயல்கள் மூலம் எதிரிகள் 1 முதல் 4 வரையிலானவர்கள் அரசுக்கு ரூ.1,83,86,081/- தவறான நிதியிழப்பு ஏற்பட காரணமாக இருந்ததோடு மட்டுமல்லாமல் தனி நபர் எதிரிகளான எதிரிகள் 5 முதல் 12 வரையிலானவர்கள் அரசை ஏமாற்றி தவறான நிதி ஆதாயம் பெறுவதற்கு தேவையான இலவச வீட்டு மனை பட்டா பெறுவதற்கு பொது ஊழியர்களான எதிரிகள் 1 முதல் 4 வரையிலானவர்கள் அவர்களது பதவியை தவறாக பயன்படுத்தியுள்ளார்கள். எனவே 1 முதல் 12 வரையிலான எதிரிகள் குற்றமுறு சதி, குற்றமுறு நம்பிக்கை மோசடி, ஏமாற்றுதல் மற்றும் நேர்மையற்ற தூண்டுதல், ஏமாற்றும் நோக்கத்துடன் பொய்யாவணம் புனைதல், பொய்யாக புனையப்பட்ட ஆவணத்தை உண்மையானது என பயன்படுத்தியது ஆகிய குற்றங்களை இ.த.ச பிரிவு u/s 120(B), 409, 420, 468, 471 IPC r/w 109 IPC & 13(2) r/w 13(1) (a) of Prevention of Corruption Act 1988 as amended on

2018 -ன் படி குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே எதிரி-1 திருமதி.ரா.முத்துமீனாட்சி அவர்களுக்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை- தலைமைச் செயலகம் கடித எண்.(1டி) எண்.241, நாள் 20.09.2021-ன் படியும், எதிரி-2 திருமதி.தெ.துர்காராணி அவர்களுக்கு வருவாய் கோட்ட அலுவலர், திருவாரூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.3004/2021/அ2 நாள் 21.10.2021-ன்படியும், எதிரி-3 திரு.G.கார்த்திக் அவர்களுக்கு வட்டாட்சியர், திருவாரூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.3549/2020/அ-1 நாள் 20.01.2021-ன் படியும் மற்றும் எதிரி-4 திருமதி.த.மணிமேகலை அவர்களுக்கு அரசு கடித எண்.1105/2020-2 பொது (சிறப்பு-அ) துறை, தலைமைச் செயலகம், சென்னை-09 நாள் 07.08.2021-ன்படியும் ஊழல் தடுப்பு (திருத்தச்சட்டம்) 2018 நாள் 26.07.2018-ன் படி பிரிவு 17(A) (1)ன் படி முறையான வழக்கு பதிவு செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே நான் இன்று 26.04.2023-ந் தேதி 16.30 மணிக்கு திருவாரூர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 02/2023 u/s 120(B), 409, 420, 468, 471 IPC r/w 109 IPC & 13(2) r/w 13(1) (a) of Prevention of Corruption Act 1988 as amended on 2018 ன் படி எதிரிகள் 1 முதல் 12 வரையிலானவர்கள் மீதும் வழக்கு பதிவு செய்தேன்.

இந்த முதல் தகவல் அறிக்கையின் அசல் மாண்புமிகு முதன்மை குற்றவியல் நடுவர் மற்றும் தனி நீதிபதி, திருவாரூர் அவர்களுக்கும் நகல்கள் உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

26/4/23

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு கண்காணிப்புப் பிரிவு
திருவாரூர்.

2018 ன் படி குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே எதிரி-1 திருமதி.ரா.முத்துமீனாட்சி அவர்களுக்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை தலைமைச் செயலகம் கடித எண்.(1டி) எண்.241, நாள் 20.09.2021-ன் படியும், எதிரி-2 திருமதி.தெ.துர்காராணி அவர்களுக்கு வருவாய் கோட்ட அலுவலர், திருவாரூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.3004/2021/அ2 நாள் 21.10.2021-ன்படியும், எதிரி-3 திரு.G.கார்த்திக் அவர்களுக்கு வட்டாட்சியர், திருவாரூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.3549/2020/அ-1 நாள் 20.01.2021-ன் படியும் மற்றும் எதிரி-4 திருமதி.த.மணிமேகலை அவர்களுக்கு அரசு கடித எண்.1105/2020-2 பொது (சிறப்பு-அ) துறை, தலைமைச் செயலகம், சென்னை-09 நாள் 07.08.2021-ன்படியும் ஊழல் தடுப்பு (திருத்தச்சட்டம்) 2018 நாள் 26.07.2018-ன் படி பிரிவு 17(A) (1)ன் படி முறையான வழக்கு பதிவு செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே நான் இன்று 26.04.2023-ந் தேதி 16.30 மணிக்கு திருவாரூர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 02/2023 u/s 120(B), 409, 420, 468, 471 IPC r/w 109 IPC & 13(2) r/w 13(1) (a) of Prevention of Corruption Act 1988 as amended on 2018 ன் படி எதிரிகள் 1 முதல் 12 வரையிலானவர்கள் மீதும் வழக்கு பதிவு செய்தேன்.

இந்த முதல் தகவல் அறிக்கையின் அசல் மாண்புமிகு முதன்மை குற்றவியல் நடுவர் மற்றும் தனி நீதிபதி, திருவாரூர் அவர்களுக்கும் நகல்கள் உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

26/4/23

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு கண்காணிப்புப் பிரிவு
திருவாரூர்.